

# உருவலிகே வன்னியலத்தோ

# விஸ்வகீர்த்தி வனஸ்பதி உருவரிகே வன்னியலா அத்தோ,

2025இன் புவி மாநாட்டிற்கான இலங்கையின் பூர்வீக மக்களின் தலைமை தலைவர்.

2025 ஆம் ஆண்டிற்கான புவி மாநாடாகிய இந்நன்மை தரும் நாளில், நமது பூர்வீக மூதாதையர்களால் நமக்கு வழங்கப்பட்ட இயற்கையின் கலைக்களஞ்சியத்தின் ஒரு பகுதியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். நான் ஒருபுறம் ஒரு பூர்வீகத் தலைவர் என்ற வகையில் பேசுவதோடு, இந்த பரந்த பிரபஞ்சத்தின் காடுகள், ஆறுகள், மலைச் சிகரங்களில் வாழும் அனைத்து உயிரினங்களின் ஒரு குரலாகவும் இந்த செய்தியை உங்களுக்கு கொண்டு வந்திருக்கிறேன். இன்று, நான் பகிரும் இந்தச் சிறப்புச் செய்தியின் மூலம், நாம் நிற்கும் இந்தப் பூமித் தாயைப் பேணிக்காப்பாற்றுவதற்கான திறவுகோலை வைத்திருக்கும், எனது பூர்வீக மூதாதையர்களின் ஞானத்தை நான் வெளிப்படுத்துவதினை நோக்கமாகக் கொண்டுள்ளேன்.

முதலில், நாமும் இயற்கையும் இரண்டு தனித்தனி அமைப்புகள் அல்ல, ஒரே ஆத்மாவாகக் கலந்துள்ளோம் என்பதை நாம் உணர வேண்டும். ஒரு மரத்தின் மீது வளர்ந்து செல்லும் கொடியைப் போல, நாமும் இயற்கையுடன் ஆழமாக ஒருங்கிணைந்துள்ளோம். நம்மைச் சுற்றியுள்ள பசுமை நமது அடிப்படையான சுவாசத்தை வழங்குகிறது; நமது உடல்கள், அவளுடைய அருளிலிருந்து கிடைக்கும் உணவு மற்றும் நீரால் வளர்கின்றன; நமது ஞானமும் திறன்களும் சூரியனின் ஆற்றலால் வடிவமைக்கப்படுகின்றன. 2025 இன் புவி மாநாட்டில் கலந்து கொண்டிருக்கும் உங்கள் அனைவருக்கும் நான் தெரிவிப்பது என்னவென்றால், நாம் இயற்கையுடன் உடைக்க முடியாத ஒரு பிணைப்பை பகிர்ந்து கொள்கிறோம் என்பதை உணர வேண்டும். இப்பார்வையில், காடுகள் வெறும் மரங்களின் கூட்டாக அல்ல, பூமியின் உயிராதாரமான சுவாசத்தொகுதியாகவும், அவை மண்ணை வளப்படுத்தி, எண்ணற்ற உயிரினங்களுக்கு வாழ்வாதாரத்தைக் கொடுக்கும் உயிர் ஊற்றாகவும் விளங்குகின்றன.

தாவரங்கள் மற்றும் விலங்கு சமுதாயங்கள், இயற்கையுடன் நாம் கொண்டிருக்கும் உறவின் முக்கிய அங்கமாகின்றன. காட்டு விலங்குகள் நம் எதிரிகள் அல்ல, மாறாக, இயற்கையின் சமநிலையை பராமரிக்கின்ற மிக அவசியமான பங்காளிகளாகும். நீங்கள் சிறிது நேரம் சிந்தித்துப் பார்த்தால், மனிதர்களைவிட விலங்குகள் சுற்றுச்சூழலின் பாதுகாவலர்களாக செயல்படுவதை காணலாம். விலங்குகள் இல்லாத மனிதன் யார்? உலகில் அனைத்து தாவரங்களும், விலங்குகளும் அழிந்துவிட்டால், மனித குலத்தின் ஆன்மா நிலைத்து நிற்குமா? இயற்கையின் இவ்வளவு ஆழமான பிணைப்பினை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எனது செய்தியின் மிக முக்கியமான விடயம் என்னவென்றால், பூமியை பாதுகாக்க நாம் எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும், நாம் சிந்தனையுடனும் தொலைநோக்குடனும் செயல்பட வேண்டும். நமது செயல்கள், மனிதர்களிடமோ அல்லது பூமியின் பிற உயிரினங்களிடமோ மோதல்களை உருவாக்கக் கூடாது. உங்கள் வீட்டில் வாழ உங்களுக்கு உரிமை இருப்பது போல, யானை, புலி, மான் மற்றும் கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிரிகளுக்கும் கூட அவற்றின் இயற்கை வாழ்விடங்களில் வாழ்வதற்கான உரிமை இருக்கிறது. வேலிகள் மற்றும் எல்லைகள் தீர்வாகாது. அதற்கு பதிலாக, அவற்றின் தேவைகள் மற்றும் இயற்கையின் சட்டங்கள் பற்றிய ஆழமான புரிதலை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். இயற்கையின் முக்கியத்துவத்தை மதிக்கும் அதே நேரத்தில், அவற்றுடன் இணக்கமாக வாழ்வதற்கான வழிகளை உருவாக்க வேண்டும்.

இந்தச் செய்தியை உங்கள் வாழ்க்கையில் ஒரு முறையாவது படித்தீர்களேயானால், இன்றிலிருந்து நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் இயற்கையைப் பற்றிய புதிய புரிதலால் வடிவமைக்கப்படும் என்பதை நான் நம்புகிறேன். பூமியில் வாழும் அனைவரும் அதன் நல்வாழ்வின், இணை பாதுகாவலர்கள் என்பதால், இயற்கையைப் பற்றிய முடிவுகளை ஆட்சியாளர்கள் நிர்வகிக்க வேண்டிய அவசியமில்லை. உண்மையில், சட்ட விதிமுறைகள் மட்டும் போதாது. இதற்கு தேவைப்படுவது இதயப்பூர்வமான அர்ப்பணிப்பாகும். நாம் சுவாசிக்கும் காற்று, நாம் குடிக்கும் நீர், நாம் நிற்கும் தரைக்கு நாம் செய்யும் நீதியான செயல்கள் மட்டுமே சமநிலையை உருவாக்கும்.

இனிமேல், மனிதன் தனித்தனியாக இயற்கையிலிருந்து விலகி வாழும் பாசாங்கை நாம் துறந்து, நாம் இயற்கையின் உடன் பிறந்த பிள்ளைகள் என்பதை உணர்வோமாக. பூமி நமக்கு சொந்தமானதல்ல, மாறாக, நாம் அதன் தாழ்மையான விருந்தினர்கள் என்பதை புரிந்துகொள்ளவேண்டும். நாம் உயிருடன் இருக்கும் காலத்தில், பசுமையாக, வளமாக, அழிவின்றி பூமியை பராமரிக்க நாம் ஏற்கும் பொறுப்பே நம் பிள்ளைகளுக்கும் அவர்களின் பிள்ளைகளுக்கும் நாம் வழங்கும் விலைமதிப்பற்ற பரிசாக அமையும். நாம் அதன் நிர்வாகிகளாக உயர்ந்து நிற்போம்.

இயற்கையை நேசிப்போம், பாதுகாப்போம், அதன் ஓசைகளை கேட்டுப் புரிந்துகொள்வோம். பூமித் தாயை காக்கும் கடமை நமக்கே!

பிப்ரவரி 13, 2025

விஸ்வகீர்த்தி வனஸ்பதி உருவரிகே வன்னியலா அத்தோ, இலங்கையின் பூர்வீக மக்களின் தலைவர்